Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா: 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம்: 01 மாசி (06 - 02 - 1991) புதன்கிழமை ஓசை: 353

## சிறுபான்மை மக்களுக்கான மாற்று ஐ. நா. சபை

(ஆம்ஸ்டடாம்)

சுதந்திரம் கோரும் நாடுகளும், சிறுபான்மை இன மக்களும் மாற்று ஐ. நா. சபை ஒன்றை அடுத்தவாரம் நெதர்லாந்தில் அமைக்க உள்ளார்களென நெதர்லாந்தில் உள்ள பால்டிக் குடியரசுகளின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். சோவியத்தின் பால்டிக் குடியரசுகள் அவுஸ்திரேலியாவின் பூர்வீக குடிகளின் அமைப்புகள் உட்பட தற்போதைய ஐ நா. சபையில் பிரதிநிதித்துவம் (4ஆம் பக்கம் பார்க்க)

### அமெரிக்க கூட்டுப்படைகளின் விமானத் தாக்குதல்

# 41,000 தடவை நிகழ்ந்த பின்னரும்

# பாக்தாத் நகர மக்கள் சுறுசுறுப்பு

## ஈராக்கின் வல்லமையைக்கண்டு பெண்டகன் வியப்பு

(பாக்தாத்)

பத்தொன்பது நாட்களில் அமெரிக்க தலைமையிலான கூட்டுப்படைகளின் நூற்றுக்கணக்கான விமானங்கள் நாற்பத்தோராயிரத்திற்கு மேற்பட்ட தாக்குதல்களை மேற்கொண்டும், பாக்தாத் நகரமும், ஈராக் மக்களும் சுறுசுறுப்புடன் இயங்குவதாக அமெரிக்க கேபிள் நெற்வேக் (சி. என். என்) செய்தியாளர் பீற்றர் ஆனந் தெரிவிக்கின்றார்.

அதேவேளை "ஈராக்மீது 41, 000 தடவைகளுக்குமேல் விமானத் தாக்குதல் நடத்திய பின்னரும் ஈராக் தாக்குப் பிடிக்கின்றது" என பென்டகன் அதிகாரிகள் தெரிவிக்கின்றார்கள். அதேவேளை இத்தாக்குதலில் ஒரு லட்சம் தொன் வெடிபொருள்களுக்கு மேல் பாவிக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த விமானத் தாக்குதல்கள் வெற்றியளிக்காததால் தரை யுத்தம் ஆரம்பிப்பது தவிர்க்க முடியாததாகிவிட்டது என்றும், இன்னும் பத்து அல்லது இருபது நாட்களில் (4 ஆம் பக்கம் பார்க்க)

## பார்வைக்கோளாறுகள் நீக்க லேசர் கதிர் சிகிச்சை

(வாஷிங்டன்)

கண்பார்வையில் ஏற்படும் கோளாறுகளை நிவர்த்தி செய்யக்கூடிய லேசர் கதிர் சிகிச்சை முறையொன்றினை அமெரிக்காவைச் சேர்ந்த மருத்துவ நிறுவனம் ஒன்று உருவாக்கியுள்ளது.

லேசர் கதிர் சிகிச்சையினால் கண்ணின் கருவிழியிலுள்ள மெல்லிய திசுவை அகற்றிவிட்டு, கண்ணிலுள்ள லென்சில் வைத்தியர்கள் தேவையான சிகிச்சையை செய்து முடிக்கலாம். இந்த (4 ஆம் பக்கம் பார்க்க)

## 125வருடங்கள்முன் யுத்தத்தின்போது உயிருடன் புதைக்கப்பட்டவர் குற்றுயிராய் மீட்கப்பட்டார்

## பாதிப்புக்கள் பற்றி ஆராய சுற்றாடல் செயற்குழு

(கொழும்பு)

சுற்றாடல் செயற்குழு சிறிலங்கா அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ளது.

பதினொருஉறுப்பினர்களை கொண்ட இக் குழுவிற்கு சுற்றாடல் பாராளுமன்றஅலுவல்கள் அமைச்சின் செயலாளர் கலாநிதி டி நேலசயா தலைமை தாங்குகிறார்

அணுவாயுத அல்லது இரசாயன அல்லது உயிரியல் ஆயுதங்கள் உபயோகிக்கப்படுமானால் அவற்றால் ஏற்படக்கூடும் என எதிர்பார்க்கப்படும் பாதிப்புக்கள் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி இக் குழு கேட்கப்பட்டுள்ளது. சூழல் மாசடைவதை தடுப்பதற்கு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பற்றி ஆலோசனை கூறவும் இக் குழு பணிக்கப்பட்டுள்ளது.

## கூட்டாக்காலிகளைக்

செய்யக்கூடிய லேசர் கதிர் சிகிச்சை முறையொன்றினை அமெரிக்காவைச் சேர்ந்த மருத்துவ நிறுவனம் ஒன்று உருவாக்கியுள்ளது.

அகற்றி விட்டு, கண்ணிலுள்ள லென்சில் வைத்தியர்கள் தேவையான சிகிச்சையை செய்து முடிக்கலாம். இந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 125வருடங்கள் முன் யுத்தத்தின்போது

# உயிருடன் புதைக்கப்பட்டவர் குற்றுயிராய் மீட்கப்பட்டார்

(நியூயோர்க்)

அமெரிக்காவில் மேற்கு வேர்ஜியாவில் ஏறத்தாழ 125 வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தத்தில் உயிருடன் புதைக்கப்பட்ட இராணுவ வீரர் ஒருவர் குற்றுயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.

ஏறக்குறைய 200 வருடங்க

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஆனந் தெரிவிக்கின்றார்.

அதேவேளை "ஈராக்மீது 41,000 தடவைகளுக்குமேல் விமானத் தாக்குதல் நடத்திய பின்னரும் ஈராக் தாக்குப் பிடிக்கின்றது" என பென்டகன் அதிகாரிகள் தெரிவிக்கின்றார்கள். அதேவேளை இத்தாக்குதலில் ஒரு லட்சம் தொன் வெடிபொருள்களுக்கு மேல் பாவிக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த விமானத் தாக்குதல்கள் வெற்றியளிக்காததால் தரை யுத்தம் ஆரம்பிப்பது தவிர்க்கமுடியாததாகிவிட்டது என்றும், இன்னும் பத்து அல்லது இருபது நாட்களில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# ஈராக்கில் குண்டு வீச்சால் வெப்பநிலை அதிகரிப்பு

(பொன்)

ஈராக்கில் மேற்கொள்ளப்படும் தொடர்ச்சியான குண்டு வீச்சுத் தாக்குதலினால் அங்கு வெப்பநிலை அதிகரித்து வருகிறது என்றும் இதனால் நோய்கள் வெகுவிரைவில் பரவும் என்று ஜேர்மனிய விஞ்ஞானி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த வெப்பநிலையினால்

(4 ஆம் பக்கம் பார்க்க)

மிக்கப்பட்டுள்ளது.

பதினொரு உறுப்பினர்களை கொண்ட இக் குழுவிற்கு சுற்றாடல் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் செயலாளர் கலாநிதி டி நேசயா தலைமை தாங்குகிறார்.

அணுவாயுத அல்லது இரசாயன அல்லது உயிரியல் ஆயு

படும் பாதிப்புக்கள் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி இக் குழு கேட்கப்பட்டுள்ளது. சூழல் மாசடைவதை தடுப்பதற்கு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பற்றி ஆலோசனை கூறவும் இக் குழு பணிக்கப்பட்டுள்ளது.

# கட்டாக்காலிகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நடவடிக்கை எடுத்துள்ளது.

கட்டாக்காலி கால்நடைகளை பிடித்து ஒப்படைத்தால் பிடிகூலியாகவும் குற்றப் பணமாகவும் மாடு ஒன்றுக்கு 50 ரூபாவும், ஆடு ஒன்றுக்கு 25 ரூபாவும் அறவிடப்படுவதுடன் பயிரழிவு, பராமரிப்புச் செலவு என்பனவும் அறவிடப்படும் என்றும் உரிமை கோரப்படாத கால்நடைகள் ஏலத்தில் விற்பனைக்கு விடப்படும் என்றும் அறிவிக்கப்படுகின்றது.

# அராலியில் ஹெலி தாக்கு

(அராலி)

நேற்றுக்காலை எட்டுமணியளவில் அராலித்துறை கடல் வழிப் பயணிகள் போக்குவரத்து நடைபெறும் பகுதி மீது சிறிலங்கா விமானப் படை ஹெலிகொப்ரர் ஒன்று இரு தடவை வட்டமிட்டு வேட்டுக்களைத் தீர்த்துச்சென்றது.

(20)

# 1000 ரூ. பணமாக வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளையில் வாடிக்கையாளர்களுக்கு இன்று முதல் ஆயிரம் ரூபா பணமாக வழங்கப்படும் எனவும், ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு இதில் முன்னுரிமை அளிக்கப்படுமெனவும் வங்கியின் முகாமையாளர் தெரிவித்துள்ளார். (மு)

# மேஜர் பிரசாத் நினைவஞ்சலி கூட்டம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் முன்னாள் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் மேஜர் பிரசாத்தின் மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலிக்கூட்டம் இன்று மாலை மூளாயில் உள்ள மேஜர்பிரசாத் நினைவுக்கலையகத்தில் நடைபெறும்(20)(க)

# பேச்சின் மூலம் பிரச்சினையை தீர்க்க எப்பொழுதும் தயாராகவே உள்ளோம்

— மகேந்திரராசா

(லண்டன்)

நாம் எப்போதும் பேச்சுவார்த்தை மூலம் எமது பிரச்



சினைகளைத் தீர்க்க ஆயத்தமாகவே உள்ளோம் இதனால் தான் பதின்நான்கு மாதங்களுக்கு மேலாக சிறிலங்கா வோடு பேசினோம். ஆனால் எப்போதும்போல் சிறிலங்கா இராணுவத்தீர்வையே விரும்பியது என விடுதலைப்புலிகள் பிரதித்தலைவர் கோ. மகேந்திரராசா பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

மேலும் அவர் பதிலளிக்கையில் எம்மீது இராணுவம் கட்டவிழ்த்து விடப்படும்போது நாம் போராடாமல் இருக்க முடியாது; அதேவேளை நாம் எப்போதும் நிபந்தனைகளின்றிப் பேச ஆயத்தமாக இருக்கிறோம். எவ்வித உதவியுமின்றி வீடின்றி, மருந்தின்றி, பட்டினியால் இறந்துவரும் மக்களுக்கு உதவி வழங்க சந்தர்ப்பம் கிடைக்குமென எண்ணியுள்ளோமெனத் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தையில் பிரபாகரன் கலந்துகொள்வது பற்றி திருபர் கேட்ட போது, பொதுவாக எந்த நிபந்தனையும் ஏற்றுக்கொள்ளமுடியாது பேச்சுவார்த்தையில் யார் கலந்துகொள்வது என்பதை தலைமைப்பீடமே முடிவு செய்ய வேண்டும், இன்னார் தான் கலந்து கொள்ள வேண்டுமென சிறிலங்கா நிபந்தனை விதிக்க முடியாது. இரண்டா

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சு நடத்தாவிடில் புலிகள் கை ஓங்கிவிடும்

-தொண்டமான்

(கண்டி)

"வடக்குக்கிழக்குப் பிரதேச தமிழ் மக்களின் பிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டுமே. ஆகவே அவர்களுடன் சிறிலங்கா அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும்" என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் எஸ். தொண்டமான் கேட்டுக் கொண்டுள்ளார்.

கண்டியில் பத்திரிகை ஒன்றிற்குப் பேட்டியளித்த எஸ். தொண்டமான் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகளுடன்பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் எனக் குறிப்பிட்டார்.

பேச்சுவார்த்தை நடத்தாவிடில் விடுதலைப் புலிகளின் கையோங்கிவிடும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேநேரம் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை நடத்த இணக்கம் தெரிவிக்காவிடில் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தையாவது முழுமையாக அமுல்படுத்த அரசாங்கம் முன்வரவேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

# குடும்பப் பெண் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மணற்பிட்டி என்ற இடத்தில் குடும்பப் பெண் ஒருவரை சிறிலங்கா இராணுவத்தினர் சுட்டுக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# கொடித்தினம்

(செ. த. நை)

தென்மராட்சி அகதிகள் நிவாரணக் கழகம் நேற்று 5 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரை கொடித்தினத்தை நடாத்துகின்றது.

தமிழீழத்தின் ஏனைய பகுதிகளிலிருந்து பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து வந்து தென்மராட்சிப் பகுதியில் முகாம்களில் வாழும் மக்களின் நலன் கருதி இக் கொடித்தினம் நடாத்தப் படுகின்றது.

நேற்றுக்காலை 7 மணியளவில் சாவகச்சேரி நகர சந்தையில் கொடித்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

விளம்பரம்

சமூகக்கல்வி

விற்பனையாகின்றது! சமூகக்கல்வி - ஆண்டு: 11. (புதிய பாடத்திட்டம்) ஆசிரியர்: ந. தர்மபாலன். சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (R-1084)


## இளவாலியில் 4 படகுகள் சேதம்

(செ. த. லை)

எழுதுமட்டுவாள் இளவாலியில் கடந்த ஞாயிறு மாலை நான்கு போர் விமானங்கள் குண்டுகள் வீசித்தாக்குதல் மேற்கொண்டதில் நான்கு படகுகள் முற்றாகச் சேதமடைந்தன.


## விக்னா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(O L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

91 O\L Dec. ஆண்டு 10, 9, 8, 7, 6

மாசி 6 இல் ஆரம்பம் மாலை 3-00 மணி

மு. குறிப்பு: புதிய அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

(B/ 1974)


## 2-ஆம் ஆண்டு நினைவஞ்சலி



வீர ஜனனம் 03 - 11 - 1969

வீர மரணம் 06 - 02 - 1989

**வீரவேங்கை கந்தையா யோகநாதன் (யோகன்)**

எம் தமிழர் துயர் கண்டு
எழுந்திட்ட வீரவேங்கையே!
நம் தமிழர் நல்லணியே யோகநாதா!
நானிலம் வியந்திடவே சென்றாய் ஐயா!
எம் துயரை நீ புரியாய் என்றாலும் வாழ்த்துகிறோம்
இறையடியில் ஆத்ம சுகம் காண்க நன்றோ!

**உன்பிரிவால் ஆறாத்துயரில் நீறாகும் நெஞ்சங்கள்**


அப்பா, அம்மா, சகோதரர்கள், சகோதரிகள், சித்தப்பாமார், சின்னம்மாமார், மாமாமார், மாமிமார், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

யோகன் வீதி.
திருநெல்வேலி தெற்கு.

(B/1975)

## நினைவு கூருகின்றோம்!

### பெப்ரவரி 6



மேஜர் கமல்



மேஜர் மதி

1986 ஆம் ஆண்டு பாந்தனில் வீரமரணமடைந்த
பாலு / சிங்காக்கோ (மூ. ஜெயகாந்தன் பருத்தித்துறை - சுந்தரோடை)

இதே ஆண்டு பருத்தித்துறையில்
வீரமரணமடைந்த
சேகர் (ஆ. முத்துசேகர் - வல்வெட்டித்துறை)

1987 ஆம் ஆண்டு வசாவிளானில் சிங்கள
இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில்
வீரமரணமடைந்த
கபில் (ப. கருத்திரசிங்கம் - காரைநகர்)
வெள்ளை (எட்மண்ட் றெஜினோல்ட் - இளவாலை)
சிவா, அமுதன் (பே. இராஜேஸ்வரன் - ஊரெழு)

1988 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தினரின்
முற்றுகையில் வீரமரணமடைந்த
யாழ்-மாவட்ட அரசியற் பொறுப்பாளர்
மேஜர் பிரசாத் (க. முரளிதரன் - சுழிபுரம்)


1989 ஆம் ஆண்டு கொக்குவிலில் இந்திய
இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில்
வீரமரணமடைந்த
கப்டன் ரவிராஜ் (இ. சிறீதரன் - கொக்குவில்)
யோகன் (க. யோகநாதன் - திருநெல்வேலி)

இதே ஆண்டு மூதூர் ஈச்சிலம்பத்தையில் இந்திய
இராணுவத்தினருடனான மோதலில்
வீரமரணமடைந்த
டெஸ்மன் (செ. ரவீந்திரன் - திருமலை)

## மூன்றாவது ஆண்டு நினைவு



## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி





# கந்தசாமி முரளீதரன்
# (மேஜர் பிரசாத்)

(முன்னாள் வட்டுக்கோட்டை பிரதேசப் பொறுப்பாளரும் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளரும்)


வீரஜனனம் **18-09-1962** — வீரமரணம் **06-02-1988**

"புரட்சியில் பூத்த மலர்கள் வாடினாலும் அதன் புரட்சி மணமோ என்றும் மாறுவதில்லை"
-"பிரசாத்"

எரிமலையாய் வீறுகொண்டு
பகை தொலைக்க
நீ நடந்தாய்
அமைதிப்படை என்று வந்த
அந்நிய இராணுவம் உன்னை
முற்றுகையிட்டுக் கொண்டதடா!
கோழையாய் அகப்படுவதைக் காட்டிலும்
வீரனாய் மரணிக்க,
நஞ்சுண்ட உன்
நெஞ்சு உறுதியை நினைக்கையிலே
எங்கள் நினைவுகள்
சில்லிட்டுப் போகுதடா!

வட்டுக்கோட்டை.
(R-1072)

உன் நினைவோடு வாழும்
உறவினர்களும், நண்பர்களும்



# வீரவேங்கை கப்டன் குகன்
## (கந்தசாமி மகேந்திரன்)

வீரஜனனம்: 10 - 06 - 1964 — வீரமரணம்: 06 - 02 - 1990

06-02-1990 இல் திருமலையில் ஈ. என். டி. எல். எவ். முகாமை நிர்மூலமாக்கிவிட்டு, ஜமாலியா ஆழியில் 22 பேருடன் படகு விபத்தில் மூழ்கி மறைவுற்ற வீரவேங்கை கப்டன் குகன் (கந்தசாமி மகேந்திரன்) அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி.

தமிழீழ விடுதலையே தாரகமந்திரமாய்த்
தன்னிகரில் வேங்கையாய்த் தறுகணாளனாய்
வழிசாறு சரிதம் நின் வீரம் போற்ற
மறைந்திட்ட குக, நின்னை மறவோம் யாமே!

பாரதமென் மற்றெந்த வல்லரசும் இலட்சியத்தின்
பாதகமாயின் பகைத்தெதிர்ப்போம் என நின்றே
வீரதீர வேங்கையாய் வீரசொர்க்க மீதினிலே
விருந்தான குக, நின்னை மறவோம் யாமே!

திருமலை ஈஎன்டி எல்எவ் முகாம் நிர்மூலம்
சிறுபொழுதில் தாக்கிய திறலினோயே
பெருங்கடலில் விசைப்படகில் மூழ்கி மாண்ட
போராளா, குக, நின்னை மறவோம் யாமே!

மற்றும் இவருடன் வீரமரணமடைந்த
22 போராளிகளுக்கும் எமது அஞ்சலிகள்!

சரணவாய் தெற்கு,
சரவெட்டி.
(R. 1080)

பெற்றோர், சகோதர
சகோதரிகள், நண்பர்கள்.

1989ஆம் ஆண்டு கொக்குவிலில் இந்திய இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் வீரமரணமடைந்த

கப்டன் ரவிராஜ் (இ. சிறிதரன் - கொக்குவில்)
யோகன் (க. யோகநாதன் - திருநெல்வேலி)

இதே ஆண்டு மூதூர் ஈச்சிலம்பத்தையில் இந்திய இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்த

டெஸ்மன் (செ. ரவீந்திரன் - திருமலை)

1990 இல் திருமலை ஜமாலியாவில் தேசத் துரோகிகள் மீதான தாக்குதலின்பின் கடலில் ஏற்பட்ட படகு விபத்தில் எமைப் பிரிந்த

மேஜர் சுரேஸ் (சி. ஜெயபதி - நிலாவெளி)
மேஜர் மதி (அ. வரதராஜன் - குச்சவெளி)
மேஜர் சுமன் (சோ. அருளானந்தன் - திரியாய்)
கப்டன் நேசி (ச. பஞ்சலிங்கம் - குச்சவெளி)
கப்டன் அன்ரன் (கு. இராமநாதன் - குச்சவெளி)
கப்டன் மகேஸ் (பா. முகுந்தன் - திருமலை)
கப்டன் ரகு (ச. பிறேம்குமார் - திரியாய்)
கப்டன் குகன் (க. மகேந்திரன் - சரவெட்டி)
லெப். கிருபன் (கு. உதயகுமார் - சாம்பல்தீவு)
லெப். கில்பர்ட் (கு. செலஸ்ரின்ராஜ் - சாம்பல்தீவு)
2ஆம் லெப். சங்கர் (இ. செல்வகுமார் - வட்டுக்கோட்டை)
2ஆம் லெப். சாந்தன் (மு. நியாஸ் - நிலாவெளி)
2ஆம் லெப். அசோக் (பொ. விக்னேஸ்வரன் - திருமலை)
பைரவன் (இ. கணேஸ் - திருமலை)
காந்தி (நி. சிவராஜா - குச்சவெளி)
விஜி (பொ. லம்போதரன் - திருமலை)
சின்ன மதி (வி. செல்வேந்திரன் - கல்குவேலி)
குமார் (இ. சதீஸ்குமார் - திருமலை)
கருணா (இ. வரதராஜன் - நிலாவெளி)
நவா (கல்குவேலி)
சின்ன சுரேஸ் (து. இராசேந்திரன் - திருமலை)
சோனி (பி. விமல்ராஜ் - திருமலை)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

— விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B-1976)

★ சிந்தனைக்கு ★

கேவலமாய் இலாபம் அடைவதை விடக்
கண்ணியமாய் நட்டம் அடைவதையே விரும்புவேன்!
— புப்லிலியஸ் ஸைரஸ்

ஈழநாதம்

31 மகேந்திரா வீதி யாழ்ப்பாணம் 06 02 1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025 - 2839 நிர்வாகபீடம்: 2288
த பெ எண் 85

# இரட்டை வேடம்போடும் சிறிலங்கா வெளியுறவு

வளைகுடாப் போரில் ஈடுபட்டுள்ள அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப் போர் விமானங்களுக்கும் யுத்தக் கப்பல்கள் என்பனவற்றிற்கு எரிபொருள் நிரப்பு வதற்குரிய நிலை சிறிலங்காவில் ஏற்பட்டிருப்பதாக இந்திய வானொலி அறிவித்தது.

அதேவேளை வளைகுடாப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வொன்றைக் காண பெல்கிரேட்டில் நடைபெறவிருக்கும் அணிசேரா நாடுகளின் அமைச்சர்கள் மட்டத்திலான மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் ஹேரல்ட் ஹேரத் யூகோ சிலாவாக்கியா செல்லவுள்ளார்.

இது சிறிலங்காவின் வெளியுறவுக் கொள்கையில் உள்ள இரட்டை வேடத் தன்மையை தெளிவாகக் காட்டுகின்றது. சிறிலங்காவின் வெளியுறவுக் கொள்கை தற்பொழுதுமட்டும் அல்ல எப்பொழுதும் இவ்வாறான இரட்டை வேடத் தன்மையைக் கொண்டதாகவே இருந்து வந்தது. அதிலும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் இவ்விரட்டை வேடத் தன்மை தெளிவானதாக இருந்து வருகின்றது.

இலங்கையில் இருந்து ஐரோப்பியர் வெளியேறினாலும் சிறிலங்கா ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் ஐரோப்பாவின் சார்புக் கொள்கையையே கடைப்பிடித்து வந்தனர். 1956ஆம் ஆண்டுவரை பிரிட்டனுக்கு விமானப்படை, கடற்படை என்பனவற்றிற்கு இலங்கையில் தளவசதிகளும் இருந்தன.

ஆனால், பின்னர் ஏற்பட்ட பிராந்திய சூழ்நிலை காரணமாக சிறிலங்கா அணிசேரா நாடுகளில் இணைய வேண்டிய நிலை ஒன்று ஏற்பட்டது. தென் ஆசியப் பிராந்தியத்தில் இறைமையுள்ள அரசாக சிறிலங்கா இருக்க வேண்டியதாக இருப்பின் அணிசேரா இயக்கத்தில் சேரவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஏனெனில் அன்று சிறிலங்காவின் மேற்குச்சார்ந்த போக்கு இந்தியாவிற்கு சந்தேகத்தை ஏற்படுத்தியிருந்தது. இந்தியா இலங்கையை ஒரு தனி அரசியல் அலகாக விடுவதா எனத் தீவிரமாக அன்று சிந்தித்தது. இதனை அன்றைய சிறிலங்காவினது பிரதம மந்திரி எஸ் டபிள்யூ ஆர். டி பண்டாரநாயக்கா தெளிவாக உணர்ந்திருந்தார். இதனால் அணிசேரா இயக்கத்தில் இலங்கையும் இணைத்து நல்லுறவை வளர்த்துக் கொண்டது.

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் எப் [illegible]

# “ மருந்துகால் மதிமுக்கால் ”

“ மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு, அருந்தியது
அற்றது போற்றி உணின் ”

திருக்குறள் – 942.

கடந்த ஏழு வருடங்களுக்கு மேலாக எமது பகுதியின் போக்குவரத்துச் சீரின்மையும், மருந்தெடுப்பான நடைமுறைகளும் மது வீடுகளைவிட்டு இடம்பெயர்ந்த சூழ்நிலைகளில் சிக்கு நிலைமையும், போர்க்கால சூழ்நிலையினால் வைத்தியசாலைகளை சரிவரச் செயற்படாமையும், எமது பகுதியில் மக்கள் மத்தியில் பலராலும் அசௌகரியங்களை தேற்றுவித்திருக்கின்றன. அத்துடன் குறிப்பிட்ட நேரங்களில் தேவைக்கேற்ற மருந்துகள் வைத்தியசாலைகளுக்குச் சென்றடையாமையும், தனியார் வைத்தியர்கள், மருந்தகங்களுக்கும் கொழும்பிலிருந்து தமது தேவைக்கேற்ற மருந்துகளை எடுத்து வரக் கூடிய வகையில் தலைமையகம் முற்றாகத் தடைவிதித்துள்ளமையும், மேலும் இப்பிரச்சினையைத் தீவிரமடையச் செய்திருக்கின்றன.

இது மாத்திரமல்லாமல், சுகாதார இலாகாவினர்மூலம் எமது தேவைக்கேற்ற அத்தியாவசிய மருந்துகள் பலமுறை கேட்டிருந்தும் உரிய நேரத்தில் எமது பிரதேசத்திற்கு அனுப்பிவைக்கப்படவில்லை. இதனால் மக்கள் சொல்லொணாத் துன்பத்தை அடைந்து கொண்டிருக்கிறார்கள். (உ-ம் - விசர்நாய்க்கடி தடை ஊசிமருந்து, தடுப்பூசி மருந்துகள், இன்சுலின் முதலியன.)

## 1.பிரச்சினையின் தாக்கம்

1. 1. 1989 ஆம் ஆண்டு எமது பகுதிக்கு ஒதுக்கியளவு பணத்திற்கு 1990ஆம் ஆண்டு நம் பிரதேசத்திற்கு மருந்துகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. ஆனால் உரிய நேரத்தில் எமது தேவைக்குரிய மருந்துகள் வந்துசேரவில்லை.

1. 2 யூன் 90ன் மேல் எமது பகுதியில் உள்ள தனியார் வைத்திய நிலையங்களை மருந்தகங்களுக்கு எவ்வித மருந்தும் எடுக்க அரசினர் அனுமதிக்கவில்லை. தனியார் வைத்திய ஸ்தாபனங்கள் தமது கைவசம் இருந்த [illegible] பாவித்தனர். இதன் பாரிய தாக்கம் எமது பகுதியில் ஏற்பட்டிருக்கிறது. பனடோல், டாஸ்ரோன், அஸ்பிரின், இன்றால், குளோரன், பிளிக்கோல் போன்ற மருந்துகளே தனியார் கடைகளில் (மருந்து) பெறுவது கஷ்டமாகவுள்ளது.

1.3. மக்கள் வைத்திய ஆலோசனையின்றி எவ்வித மருந்தும் பாவிக்கக் கூடாது. மக்கள் கேட்பினும் இம்மருந்துகளை மருந்தகங்களில் வியாபாரம் செய்தல் தவிர்க்கப்படல் வேண்டும். சிபாரிசு செய்யப்படாத மருந்துகள், பாவிப்பதனால் பாதகமான பலன் ஏற்பட இடமுண்டு. உ-ம். தடிமன், காய்ச்சல் போன்ற நோய்களுக்கு குளோரோமைசிற்றீன் போன்ற மருந்துகள் எடுத்தல் தவிர்க்கப்படல் வேண்டும். காய்ச்சல் ஒரு நோயின் அறிகுறி. நோயைச் சரிவர இனம்கண்டு தான் பொருத்தமான மருந்து கள் பாவிக்க முன்வரல் வேண்டும்.

1 4 மருந்துகள் மருந்தகங்களில் விற்கப்படுகிறதா? [illegible] வைத்திய நிலையங்களில் பெறப்படும் மருந்துகள் சரிவரப் பாவிக்கப்படாமல் கைவிடப்பட்டிருப்பதை நினைவிலிருத்துகிறோம்.

1 5 [illegible] மருந்துகளை நோயாளர்கள் ஏன் சரிவரப் பாவிப்பதில்லை? அத்துடன் இடையில் தொடர்ந்து உண்ணவேண்டிய சிகிச்சையை ஏன் பெறுவோர்கள் இல்லை [illegible] நிறுத்தி [illegible] ளாகிறார்கள். உ-ம் [illegible] கம், அதி இரத்த அழுத்தம், ஊட்டம்பாதிப்பு;

1.6. நோய் தனக்குக் குணமாக வேண்டும் என ஒவ்வொரு நோயாளியும் விரும்புவது இயல்பு. அப்படியிருந்தும்தொடர்ந்து ஏன் சிகிச்சை பெறாதிருக்கிறான்?

1.7. சிகிச்சை நிலையங்களில் கர்ப்பவதிகளுக்கும் குழந்தைகளுக்கும் கொடுக்கும் மருந்துகளையும் திரிப்போசா மாவையும், அதற்குரியோர் சரிவர எடுக்கிறார்கள் இல்லை. திரிப்போசா, மருந்தாகப் பாவித்து தினமும் எடுக்க வேண்டும். ஆனால் குடும்ப அங்கத்தவர் யாபேரும் திரிப்போசா மாவைப் பகிர்ந்துண்ணின் குழந்தையின் முன்னேற்றத்தைக் காண முடியுமா?

(தொடரும்)

வைத்திய கலாநிதி ந [illegible]
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்.

## வவுனியாவில் அதிகாரிகள்

# நிவாரணப் பொருள்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளவில்லை

(வவுனியா) [illegible] தெரிவித்தார். [illegible] நிவாரணப் பொ [illegible]

பணத்திற்கு 1990ஆம் ஆண்டு ...

பிராந்தியத்தில் இறைமையுள்ள அரசாக சிறிலங்கா இருக்க வேண்டியதாக இருப்பின் அணிசேரா இயக்கத்தில் சேரவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஏனெனில் அன்று சிறிலங்காவின் மேற்குச்சார்ந்த போக்கு இந்தியாவிற்கு சந்தேகத்தை ஏற்படுத்தியிருந்தது. இந்தியா இலங்கையை ஒரு தனி அரசியல் அலகாக விடுவதா எனத் தீவிரமாக அன்று சிந்தித்தது. இதனை அன்றைய சிறிலங்காவினது பிரதம மந்திரி எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா தெளிவாக உணர்ந்திருந்தார். இதனால் அணிசேரா இயக்கத்தில் இலங்கையும் இணைந்து நல்லுறவை வளர்த்துக் கொண்டது.

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் எப்பொழுதும் மேற்குச் சார்ந்த போக்கே முதன்மைப்பட்டது.

இதே போன்று அரபு நாடுகளின் விடயத்தில் சிறிலங்கா இரட்டைத்தனமான வெளியுறவுக் கொள்கையையே கடைப்பிடித்து வந்தது. பொருளாதார நலன்களைப் பெறுவதற்காக அரபுலகம் சார்ந்த வெளிநாட்டுக் கொள்கையைக் கடைப்பிடிக்க சிறிலங்கா அரசாங்கம் அதன் பிரகாரம் பாலஸ்தீனர்களின் விடுதலைப் போராட்டத்தை அங்கீகரித்தது. அதேவேளை உள்நாட்டின் நெருக்கடிகள் தோன்றிய போது இஸ்ரேலிய நட்பு பூண்டது. அதன் மூலம் உத்தியோகபூர்வமாக இஸ்ரேலிய உளவு ஸ்தாபனமான மொஸாட்டை நாட்டிற்குள் அழைத்ததோடு அமெரிக்க தூதுவராலயத்தில் இஸ்ரேல் நலன்காக்கும் பிரிவையும் அமைக்க அனுமதி கொடுத்தது.

இதே போன்ற நிலைமையே வளைகுடாப்பிரச்சினையிலும் சிறிலங்கா கடைப்பிடிக்க முற்படுகின்றது. குவைத்திற்குள் ஈராக் ஊடுருவியபோது ஐ.நா ஈராக்கிற்கு எதிராகக் கொண்டுவந்த பொருளாதாரத் தடையை தான் கடைப்பிடிக்கப் போவதில்லை என அறிவித்தது. தேயிலைக்கு சந்தை தேட முனைந்தது. ஆனால் இன்று அமெரிக்க போர்க்கப்பல்களுக்கு எண்ணெய் வழங்க சம்மதிக்கப் போவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அதேவேளை அணிசேராக் கொள்கையின் கீழ் நடுநிலைமை வகிப்பதாக கூறிக் கொண்டு பேச்சு வார்த்தை நடத்தி பெயரெடுக்கச் செல்கின்றது.

இவ்வாறான கொள்கை மாற்றங்களும், இரட்டை வேடங்களும் சிறிலங்காவின் வெளிநாட்டுக் கொள்கையில் மட்டுமல்ல உள்நாட்டுக் கொள்கைகளிலும் பரவலாகக் காணலாம். அதாவது சமாதானத்தை நிலைநாட்ட கொலைகள் செய்வோம் என்பது சிறிலங்காவின் உள்நாட்டுக் கொள்கையாகும். இதிலிருந்து சிறிலங்காவின் தத்துவத்திற்கும் செயற்பாட்டிற்கும் உள்ள இடைவெளி தெரியவரும். இதனை இன்று இலங்கையில் உள்ள தமிழர்கள் தெளிவாக உணர்ந்துள்ளார்கள்.

தமது தேவைக்காக எந்தப் பேயுடனும் கூட்டுச்சேர நாம் தயார் என்பது முன்னாள் சிறிலங்கா ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் கூற்றாகும். இதுவே அன்றும் இன்றும் சிறிலங்கா அரசாங்கத்தின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கையுமாகும்.

இதனை இன்று முஸ்லிம்களுக்கும் சிறிலங்கா சிங்கள அரசாங்கம் மீண்டும் தெளிவாக உணர்த்தியுள்ளது. முன்னரும் சில தடவைகள் சிறிலங்கா அரசாங்கம் உணர்த்தியதை முஸ்லிம்கள் உணரத் தவறிவிட்டார்கள். இன்று வளைகுடாப் போர் மீண்டும் அதை உணர்த்தப் போதுமானதாகும்.

### வவுனியாவில் அதிகாரிகள்

# நிவாரணப் பொருள்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளவில்லை

(வவுனியா)

வவுனியா நகர்ப்பகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகளில் உள்ள மக்களுக்கு அகதி நிவாரணப் பொருட்கள் வழங்க முடியாத நிலையில் உள்ளோம். அரச அதிகாரிகளினால் இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

இவ்வாறு வவுனியா தெற்கு தமிழ்ப் பகுதி உதவி அரசாங்க அதிபர் பிரிவு கூட்டுறவுச் சமாசத் தலைவர் திரு. வீரசிங்கம் ஈழநாதத்திற்குத் தெரிவித்தார்.

கடந்த செப்ரெம்பர் மாதத்தின் பின்னர் வவுனியா இராமப்புறக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளுக்கு உணவுப் பொருள்கள் எவையும் வந்து சேரவில்லை எனவும் இதற்குக் காரணம் வவுனியா நகரப் பகுதியிருந்து பொருள்கள் ஏற்றிக்கொண்டு வருவதற்கு இராணுவம் தடைவிதித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

வவுனியா செட்டிகுளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கு கடந்த செப்ரெம்பர் மாதத்தின் பின்னர் ஜனசவிய திட்டத்தின்கீழ் வழங்கப்பட வேண்டிய பொருள்கள் அனுப்பி வைக்கப்படவில்லை என்று இதனுடன் சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை மேற்படி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படவேண்டிய 17 இலட்சம் ரூபா பெறுமதியான பாடசாலை மதிய உணவு முத்திரைகளும், பொருள்களும் அனுப்பிவைக்கப்படவில்லை என்று அவர் தெரிவித்தார்.

வவுனியா இராமப்புறக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் உபவனிப் பிரதேசத்தில் முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் அகதி நிவாரணப் பொருள்கள் கடந்த சில மாதங்களாக அனுப்பிவைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். (இ)

## சோதனைச் சாவடி வரிசையில் சைக்கிள் திருட்டு

(செ. கு. மை.)

வவுனியா இராணுவ முகாமில் சோதனை நடைபெற்றுக் கொண்டிருக்கையில் வரிசையில் நின்ற ஒருவர் தனது புதிய [illegible] சைக்கிளைப் பறிகொடுத்துள்ளார்.

இளவாலையைச் சேர்ந்த ம. ஆறுமுகநாதர் 4000 ரூபாவுக்கு புதிதாக வாங்கிய சைக்கிளே பறிபோனதாகும்.

வரிசையில் அதிக நேரம் நின்ற களைப்பினால் சற்றுக் கண்ணயர்ந்து விட்டாராம். திடீரென விழித்துப் பார்த்த பொழுது சைக்கிள் மாயமாக மறைந்துவிட்டதைக் கண்டு பேரதிர்ச்சியுற்றார்.

## விபத்து; இருவர் காயம்

(செ. கு. மை.)

கொடிகாமம் புகையிரத நிலையத்தடியில் இரு மோட்டார் சைக்கிள்கள் விபத்துக்குள்ளானதில் க. பிரதாபன் (17 வயது) என்பவர் ஆபத்தான நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த திங்களன்று நண்பகல் கொடிகாமத்திலிருந்து முல்லைத்தீவுக்கு 'சாலி' மோட்டார் சைக்கிளில் இவர் சென்று கொண்டிருந்த போதே படுகாயமடைந்தார். இவருடன் இருந்த கணேசமூர்த்தி (27 வயது) என்பவரும் காயமடைந்தார்.

## வருடாந்த பொதுக் கூட்டம்

(உரும்பிராய்)

யாழ் மாவட்ட சாரணர் இயக்கத்தின் சாரணத் தலைவர்களின் வருடாந்த பொதுக்கூட்டம் யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் 11-02-91 திங்கட்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு யாழ். மாவட்ட சாரண ஆணையாளர் திரு. சு. சுப்பிரமணியம் அவர்களின் தலைமையில் நடைபெறும்.

## ஹேரத் பெல்கிரேட்

பெல்கிரேட்டில் எதிர்வரும் 16 ஆம் திகதி அணிசேரா நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் மாநாடு நடைபெறவுள்ளது. இம் மாநாட்டில் வளைகுடாவில் யுத்த ஓய்வு ஒன்றை மேற்கொள்வது தொடர்பாக ஆராயப்படும். சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் ஹரல்ட் ஹேரத்துடன் அதிகாரிகள் சிலரும் மாநாட்டில் கலந்து கொள்வார்.

# பாரத் பந்தை முன்னிட்டு தமிழகத்தில் 15,000 பேர் கைது

தமிழகத்தில் இன்று நடை பெறஇருக்கும் "பாரத் பந்த்" இன்போது பொது ஒழுங்கைக் காக்குமாறும், சட்டம் ஒழுங்குகளைப்பேணி நடக்குமாறும் தமிழக மக்களை ஆளுநர் பர்னாலா கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும் அவர் அரசுடமைகளுக்கும், தனியார் உடமைகளுக்கும் சேதம் ஏற்படுவதை தடுக்கும் முகமாகவும் இயல்பான வாழ்க்கை நிலையை உறுதி செய்யவும் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அனைத்தும் எடுக்கப் பட்டுள்ளதாக அறிக்கை யொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

"பாரத்பந்த்" தினை ஒட்டி மாநில அரசு போதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக ஆளுநரின் ஆலோசகர் வி. கார்த்திகேயன் கூறியுள்ளார்.

சென்னையில் செய்தியாளரிடம் பேசிய அவர் மேலும் முன் எச்சரிக்கையாக சுமார் 15,000 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகச் சொன்னார். "பந்த்தை" யொட்டிய பாதுகாப்பு பணிக்காக மத்திய பாதுகாப்பு படையினர் தமிழகம் எங்கும் பணியிடப்படுவர் எனக் கூறிய அவர் ஏற்கனவே சுமார் எட்டுக் கம்பனி படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனவும் மேலும் நாலரைக்கம்பனி படையினர் நேற்றிரவு வந்திருப்பதாகவும் இத்துடன் இரண்டு கம்பனி படைகள் அனுப்பும்படி கேட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

'பந்த்' காரணமாக சட்டம் ஒழுங்கு பாதிக்கப்படுமா என்று கேட்கப்பட்டதற்கு பேருந்துகள், ரயில்கள் அனைத்தும் நேற்றிரவுமுதல் ரத்துச் செய்யப்பட்டிருப்பதால் அதற்கான வாய்ப்பு இல்லையென்று கூறினார். பள்ளிகள், கல்லூரிகள் என்பன விடுமுறை விடப்பட்டுள்ளன. எனினும் அரச அலுவலகங்கள் வழமைபோல்செயலாற்றுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையில் தமிழகசட்டமன்றத்திற்கான தேர்தலை விரைவில் நடாத்துமாறு கோரியுள்ள அ.இ.அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதா இந்திரா காங்கிரசுடன் தொகுதி உடன்பாடு காணப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார். அ.இ.அ.தி.மு.க.வுக்கு 168 இடங்களும், காங்கிரசுக்கு 66 இடங்களும் ஒதுக்கப்பட்டிருப்பதாக புதுடில்லியில் செய்தியாளரிடம் ஜெயலலிதா தெரிவித்திருக்கிறார்.

இது இவ்வாறிருக்க உள்துறை அமைச்சின் ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய பிரதமர் சந்திரசேகர் தமிழ் நாட்டின் நிலைவரம் வெறும்சட்டம் ஒழுங்கு பிரச்சனையாக மட்டுமல்லாமல் மிகவும்மோசமாக இருந்ததாலேயே கருணாநிதி அமைச்சரவையைக் கலைக்க வேண்டி ஏற்பட்டது எனக் குறிப்பிட்டுள்ளார்.

## போக்குவரத்து ஊழியர் கருத்தரங்கு

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் சகல சாலைகளினது சகல ஊழியர்களுக்குமான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை காலை 7.00 மணிக்கு மேற்படி சபையின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற உள்ளது.

எனவே சகல ஊழியர்களும் இக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளும்படி தமிழ் பேசும் போக்குவரத்து ஊழியர் சங்கத் தலைவர் திரு நாகலிங்கம் கேட்டுள்ளார்.

## உயிருடன்

...ளுக்கு மேற்பட்ட பிரேதக் குழிகளை சேமக்காலையில் சில தொழிலாளிகள் அகழ்ந்த போது "ப்ரீவேட் ஜெஸ்ஸ் மேர்பி" என்பவர் ஈனசுரல் ஒலியால் ஏனையோரை உதவிக்கு அழைத்தாராம்.

புதைகுழியில் காணப்பட்ட இந்த இராணுவ வீரர் கற்காலத்தில் காடுகளில் வாழ்ந்த ஆதிமனிதனைப்போல்காணப்பட்டார். தலைமயிர் நீண்டு வளர்ந்து இருந்தது. கை,கால்களில் நகங்கள் வளர்ந்து சுருண்டு காட்சியளித்தனவாம்.

தொழிலாளர்கள் உடனே அம்புலன்ஸ் வண்டியை அழைத்து வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்றனர் அங்கு அவரின் அறிவு தெளிவானதும் இராணுவம் காப்பாற்றப்பட்டதா? ஜனாதிபதி 'லிங்கோலின்' இராணுவ வீரர்களைச் சந்திக்க வந்தாரா போன்ற கேள்விகளையே முதலில் கேட்டாராம். இவரின் அருகில் விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள்

## 41,000 தடவை

தரையுத்தம் ஆரம்பித்துவிடுமெனவும் அவ்வதிகாரி தெரிவித்தார்.

அதேவேளை கூட்டுப்படைகள் நடாத்திய 41,000 தடவைகளுக்கு மேலான விமானத் தாக்குதலின் பின்னரும் ஈராக்கின் துணிச்சல் சற்றும்குறையவில்லையெனவும், கூட்டுப் படைகளின் குண்டு வீச்சால் நூற்றுக்கணக்கான சாதாரண பெண்கள், குழந்தைகள் உட்பட பொதுமக்கள் கொல்லப் பட்டிருப்பதாகவும்ஈராக் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் சி. என். என். செய்தி நிறுவனத்தின் நிருபர் பீற்றர் ஆனற் பாக்தாத்திலிருந்து எடுத்து அனுப்பிய படங்களும், செய்திகளும் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளன. உக்கிரமான சண்டை இடம்பெற்றபோதிலும் மக்கள் தங்கள் அன்றாட அலுவல்களில் ஈடுபட்டிருப்பதாக அவர் கூறியுள்ளார். மூன்று வாரங்களாக யுத்தம் நடைபெறும்போதிலும் பாக்தாத் வீதிகளில்போக்குவரத்து நெரிசல் காணப்படுவதாக நிருபர் கூறியுள்ளார்.

ஆற்றங்கரையில் பாத்திரம் கழுவுவதையும்பாவனைக்காக நீரை எடுத்துச் செல்வதையும் காணக்கூடியதாக இருந்தது. கடந்த சில நட்களாக விமா

# 19ஆம் நாள் வளைகுடாப் போர்

## யுத்தத்தின் ஆரம்பத்தில் உள்ளோம்

★ "வளைகுடாப் போரில் நாம் இன்னும் ஆரம்பத்தில் தான் இருக்கிறோம். முழு அளவிலான யுத்தத்தை விரைவில் எதிர்பார்க்கலாம் என்று ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைன் அறிவித்துள்ளார்.

## ஜோர்டான் ட்ரக்குகள் மீது தாக்குதல்

★ ஈராக் வழியாகச் செல்லும் ஜோர்டானிய ட்ரக்குகளை கூட்டுப்படை விமானங்கள் தாக்குவதை ஐ. நா. தலைமைச் செயலாளர் பெரஸ் டி குயிலர் வன்மையாக கண்டித்துள்ளார், வளைகுடாப் போரில் ஜோர்டானையும் வலிந்து இழுக்கும் முயற்சியாகவே இந்த நடவடிக்கை அமைகிறது என்று குறிப்பிட்டார். ஆனால் தாம் எடுத்த இந்த நடவடிக்கையானது சரியானது என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

★ நேற்று முன்தினம் ஈராக்கில் இருந்து எண்ணெயை ஏற்றிச் சென்ற 3 ஜோர்டானிய டிரக்குகளை அமெரிக்க தலைமையிலான கூட்டுப்படை தாக்கியதில் 12 பேர் காயமுற்றார்கள் என்று அம்மானில் அதிகாரிகள் தெரிவித்தனர்

## ஈரான் யோசனை நிராகரிப்பு

★ வளைகுடாப் போரை முடிவிற்குக் கொண்டுவர ஈரான் மேற்கொண்ட மத்தியஸ்த யோசனைகளை அமெரிக்கா நிராகரித்துள்ளது. இந்த யோசனைகள் குறித்து கருத்து வெளியிட்ட வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் "இந்த யோசனைகள் போரில் அதிக வேறுபாடுகளை ஏற்படுத்தாது" என்று தெரிவித்தார். குவைத்தில் இருந்து ஈராக் வெளியேறுவதான செயல் ராஜீயத்துறை முயற்சிகள் மூலம் நடைபெறும் என தாம் எதிர்பார்க்கவில்லை என்று அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் டிக் செனி தெரிவித்தார்.

★ ஜெருசலேத்தில் உள்ள பிரித்தானிய விமான சேவைகள் நிலையம் தீ வைத்துக் கொளுத்தப்பட்டது.

★ அமெரிக்காவின் வெர்ஜினியாவில் உலகின் மிகப்பெரிய கடற்படைத் தளத்தருகே இரண்டு இரசாயனக் குண்டுகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

★ வளைகுடாப் போரினால் இஸ்ரேலுக்கு ஏற்பட்ட இழப்புக்களை ஈடுசெய்ய நிதிஉதவி வழங்குவது என ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகள் கொள்கையளவில் ஒப்புக் கொண்டுள்ளன.

★ லெபனானில் உள்ள பாலஸ்தீன அகதிமுகாம் மீது இஸ்ரேலிய விமானங்கள் நேற்று குண்டுவீச்சு தாக்குதலை நடத்தின.

★ ஈராக்மீது அமெரிக்கா நடத்திவரும் கடும் தாக்குதல்கள் மீண்டும் பனிப்போர் நிலைமையைத் தோற்றுவிக்கலாம் என ரஷ்ய பாராளுமன்றத்தில் எச்சரிக்கப்பட்டது.

★ பாக்தாத் தனது நாட்டு மக்களுக்கு எரிபொருள் வழங்குவதை நேற்று முதல் காலவரையறை இன்றி நிறுத்தி வைத்துள்ளது.

## நாடகப் பயிற்சி

பங்குனிமாத நடுப்பகுதியில் மேடையேறவிருக்கும் நாடகத்தில் நடிப்பதற்கு பயிற்சிபெற விரும்பும் ஆண் பெண் இருபாலாரும் இன்று புதன் கிழமை மாலை 3 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரி குமார

## யாருடையது?

இ. டானியல் என்பவரின் குடும்பத்தைச் சேர்ந்த உணவு அட்டைகளும் இ. கந்தசாமி யாழ். பரியோவான் கல்லூரி விடுதி ஊழியர் அடையாள அட்டையும் எம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது

...களினது சகல ஊழியர்களுக்குமான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை காலை 7.00 மணிக்கு மேற்படி சபையின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற உள்ளது.

எனவே சகல ஊழியர்களும் இக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளும்படி தமிழ் பேசும் போக்குவரத்து ஊழியர் சம்மேளனத் தலைவர் திரு நாகலிங்கம் கேட்டுள்ளார்.

### குடும்பப்பெண்

கொலை செய்ததுடன் இவரின் மகனை சுட்டுக் காயப்படுத்தியுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை மாலை மூன்று மணியளவில் மேற்படி பகுதிக்கு வந்த இராணுவத்தினர் தேடுதல் நடாத்திய சமயம் இவர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது மேற்படி பெண் கொல்லப்பட்டார்.

### சிறுபான்மை

பெறாத இனங்களும் மக்கள் இயக்கங்களும் இந்தமாற்று ஐ.நா. சபையில் அங்கம் வகிக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

முதலில் இந்த அமைப்பில் 20 உறுப்பினர்கள் இருப்பார்கள் என்றும் அவர்கள் தமது அபிலாசைகளை வெளிப்படுத்துவதற்கான சுதந்திர அமைப்பாக இது விளங்கும் என்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

...வாம்.

தொழிலாளர்கள் உடனே அம்புலன்ஸ் வண்டியை அழைத்து வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்றனர் அங்கு அவரின் அறிவு தெளிவானதும் இராணுவம் காப்பாற்றப்பட்டதா? ஜனாதிபதி 'லிங்கோலின்' இராணுவ வீரர்களைச் சந்திக்க வந்தாரா போன்ற கேள்விகளையே முதலில் கேட்டாராம். இவரின் அருகில் விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் 24 மணிநேரமும் இருந்து இவரின் நடவடிக்கைகளை அவதானிக்கத் தொடங்கினராம்.

இந்த விஞ்ஞானிகள் இவரின் கை, கால்களை விறைப்பாக இருந்ததையொட்டி மருத்துவ சிகிச்சை அளித்தனர். இதற்கு காரணம் ஐஸ் கட்டிகள் உறைய வைக்கும் நிலவறைக்கு அருகாமையில் புதைக்கப்பட்டிருந்ததினால் இவரது உடல் விறைப்பாக இருந்திருக்கலாம் எனக் கருத்து வெளியிட்டுள்ளனர்.

1864ஆம் ஆண்டு அவர் புதைக்கப்பட்டபொழுது 25 வயதாக இருந்தார். தற்பொழுது இவருக்கு 151 வயது எனினும் 25 வயதை ஒத்தவராகவும், அறிவு வளர்ச்சியும் உள்ளதாகவும் கூறப்படுகின்றது. இவரின் இந்த மீட்பு மருத்துவ உலகில் சாதனையாகவும் ஆச்சரியமாகவும் இருக்கிறது என விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

...தங்கள் அன்றாட அலுவல்களில் ஈடுபட்டிருப்பதாக அவர் கூறியுள்ளார். மூன்று வாரங்களாக யுத்தம் நடைபெறும்போதிலும் பாக்தாத் வீதிகளில்போக்குவரத்து நெரிசல் காணப்படுவதாக நிருபர் கூறியுள்ளார்.

ஆற்றங்கரையில் பாத்திரம் கழுவுவதையும் பாவனைக்காக நீரை எடுத்துச் செல்வதையும் காணக்கூடியதாக இருந்தது. கடந்த சில நாட்களாக விமானத்தாக்குதல் பற்றிய எச்சரிக்கைச் சங்கொலி கேட்பதும் வெகுவாகக் குறைந்துள்ளது பாக்தாத் சந்தை புத்துயிர் பெறத் தொடங்கியுள்ளது.

ஹோட்டலொன்றில் திருமண வைபவமும் இடம்பெற்றது. இதில் மணமக்களின் உறவினர்களும், நண்பர்களும் கலந்து கொண்டனர். தமது அன்றாட வாழ்க்கையைச் சீர்குலைக்கும் அமெரிக்க விமானக்குண்டு வீச்சுகளை அவர்கள் கண்டனம் செய்தனர்.

குவைத்தை விடுவிக்க என்று வந்தவர்கள் ஏன் பாக்தாத் மீது தாக்குதல் நடத்தவேண்டும்? குவைத் ஈராக்கின் தெற்கில் அல்லவா இருக்கின்றது? குவைத் எங்கே இருக்கிறது எனத் தெரியாது விட்டால் அவர்கள் தேசப்படத்தை பார்க்கட்டும் என்று ஈராக் பெண்மணிகள் கூறினர். நகரத்தை குண்டுகளைத் தாக்கி நீர் விநியோகத்தையும், மின் விநியோகத்தையும் துண்டித்து விட்டதாக ஈராக்கிய மாணவி ஒருவர் குறிப்பிட்டார்.

### குழந்தைகளுக்காக பதிலடி

ஈராக்கிய குடியிருப்புக்கள் மீது அமெரிக்க தலைமையிலான கூட்டுப்படைகள் தாக்குதல் நடத்துவதற்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷே தூண்டுதல் கொடுத்துள்ளார் என ஈராக் குற்றஞ் சாட்டியுள்ளது இத்தாக்குதலின்போது இறந்த குழந்தைகளுக்காக பதிலடி கொடுக்க ஈராக்கிய இராணுவம் தயாராக இருக்கிறது என்று பாக்தாத் வானொலி அறிவித்தது.

...ன் மீண்டும் பனிப்போர் நிலைமையைத் தோற்றுவிக்கலாம் என ரஷ்ய பாராளுமன்றத்தில் எச்சரிக்கப்பட்டது.

★ பாக்தாத் தனது நாட்டு மக்களுக்கு எரிபொருள் வழங்குவதை நேற்று முதல் காலவரையறை இன்றி நிறுத்தி வைத்துள்ளது.

## நாடகப் பயிற்சி

பங்குனிமாத நடுப்பகுதியில் மேடையேறவிருக்கும் நாடகத்தில் நடிப்பதற்கு பயிற்சிபெற விரும்பும் ஆண் பெண் இருபாலாரும் இன்று புதன் கிழமை மாலை 3 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரி குமாரசாமிமண்டபத்துக்கு வருமாறு நாடக அரங்கக் கல்லூரியினர் வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

### ஈராக்கில்

கடந்த சில வாரங்களில் பல குறைப் பிரசவங்கள் இடம்பெற்றன என்றும் பிறந்த குழந்தைகளில் 90 வீதம் இறந்து விட்டதாகவும் அந்த விஞ்ஞானி தெரிவித்தார்.

அத்தவேளை பஸ்ரா நகரில் நடந்த கூட்டுப் படைகள் நடத்திய தாக்குதல் பற்றி நேரில் கண்ட இந்தியப் பொறியியலாளர் தெரிவித்த தகவல்களை நேற்றிரவு பி.பி.சி. ஒலிபரப்பியது.

கால்மணி நேரத்திற்கு ஒரு குண்டு வீதம் வந்து விழுந்தது. ஒருநாள் இரவில் பன்னிரண்டுக்கும் அதிகமான குண்டுகள் விழுந்து வெடித்தன.

பஸ்ரா நகரம் கடுமையான சேதத்திற்கு உள்ளாகியுள்ளது. தகவல் தொடர்பு நிலையங்கள், எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள், முக்கிய கட்டடங்களையும் கூட்டுப்படைகள் தாக்கியுள்ளன.

பஸ்ரா நகரின் பொது மக்கள் குடியிருப்புக்கள் மீது 40-50 தடவைகள் குண்டு வீசப்பட்டதாகவும், சிறிய குண்டுகள் மழை போலப் பொழியப்பட்டதாகவும் கூறினார்.

பஸ்ரா நகரம் புகை மண்டிக் கிடப்பதாகவும் சூரிய ஒளி மூன்று நான்கு நாட்கள் வரை தெரியவில்லை எனவும் கூறினார், சுமார் இருபத்தைந்துக்கும் மேலான சடலங்களையும் நேரில்கண்டதாகவும் அவர் சொன்னார்.

## யாருடையது?

இ. டானியல் என்பவரின் குடும்பத்தைச் சேர்ந்த உணவு அட்டைகளும் இ. கந்தசாமி யாழ். பரியோவான் கல்லூரி விடுதி ஊழியர் அடையாள அட்டையும் எம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது

### பேச்சின் மூலம்

வதாக ஆயுதங்களை கீழே வைப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை. ஒரு நிரந்தரத் தீர்வில் இவ்வாயுதங்கள் தமிழ் மக்களின் பாதுகாப்பிற்கான ஒரு அமைப்பில் சேர்த்துக்கொள்ளப்படும் எமது இந் நிலைப்பாடு புதியதல்ல. சிறிலங்காவுடன் பேசும்போது நாம் இந்நிலைப்பாட்டை தெளிவாக எடுத்துக்கூறியிருந்தோம். மூன்றாவதாக தமிழ் மக்களின்தேசவிரோதிகளாகக் கருதப்படுபவர்களுடன், பேசுவதில் பயனில்லை இந்த தேசவிரோதிகளுக்கு கொள்கை என்பதும் கிடையாது

ஒருநாள் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வார்கள், மறுநாள் ஆறாவது திருத்தச் சட்டத்தை ஏற்றுக் கொள்வார்கள் மூன்றாம் நாள் சிறிலங்காவின் ஒற்றையாட்சியை ஏற்பார்கள். ஆக்கிரமிப்பாளர்களுடன் சேர்ந்து தமிழ் மக்களை அவர்களின் போராட்டத்தைக் காட்டிக் கொடுப்பார்கள். தமிழ்மக்களால் மரியாதைக்குரியவர்களாகக் கருதப்படாத இவர்களுடன் பேசுவதால் எந்தப் பயனுமில்லை எனவும் பதிலளித்தார்

### பார்வைக்கோளாறுகள்

முறையைப் பின்பற்றினால் கண்டாக் லென்சுகளையோ, மூக்குக் கண்ணாடிகளையோ பயன்படுத்தத்தேவையில்லை.

அண்மைப்பார்வைக் குரிய கோளாறுகளை குணப்படுத்தலாம் என்றும், கண்ணில்லாத நோயாளிகளுக்கு பலன் அளிக்கும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# யாழ்ப்பாண மாநகர சபை கலந்துரையாடல் 06-02-1991

சிறுகைத்தொழில் திட்டங்கள் தயாரித்தல் தொடர்பான கலந்துரையாடலொன்று 06.02.91 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு முறைசாராக் கல்வி அதிகாரிகளுடன் மாநகர அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. யாழ். மாநகரசபை எல்லைக்குள் இருக்கும் சகல சனசமூக நிலையத் தலைவர்கள் / செயலாளர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் இக் கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்று யாழ். மாநகர ஆணையாளர் வி. பி. பாலசிங்கம் வேண்டுகோள்விடுத்துள்ளார்

(விளம்பர இல B/1986)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் [illegible] வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.